அது இருக்கிறது. எனவே, இதனை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போகிறேன், ஆனால், இதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு, இதனையும் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

290—

காகித ஆலை

*__34734__—__திரு. என். முருகுமாறன்:__

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத்தில் உள்ள சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தினுள் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் ஒரு காகித ஆலையை அமைக்கும் அளவுக்குத் தேவையான மூலப் பொருட்களான கரும்புச் சக்கை, கூழ் மரங்கள், தண்ணீர் வசதி மற்றும் போதிய இட வசதி கிடைக்க வாய்ப்பில்லை என்பதால் காகித ஆலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

2014 ஜூலை 31]

முற்பகல் 10-40

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்பது வெறும் ஒற்றை சொல் அல்ல; அது 1½ கோடி கழகத் தொண்டர்களின் உயிர்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்பது வெறும் ஒற்றை சொல் அல்ல; அது 7½ கோடி தமிழக மக்களின் வாழ்வு! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்பது வெறும் ஒற்றை சொல் அல்ல; அது 10½ கோடி உலகத் தமிழர்களின் முகவரி! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்பது வெறும் ஒற்றை சொல் அல்ல; அது தமிழக அரசியலின் ஆலமரம்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்பது வெறும் ஒற்றை சொல் அல்ல; அது ஒடுக்கப்பட்ட மக்களின் பேராலயம்! (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பெருமளவில் வசிக்கக்கூடிய காட்டுமன்னார்கோவில் தனித் தொகுதிக்கு 110 விதியின்கீழ் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தைத் தாயுள்ளத்தோடு வழங்கி, தொகுதி மாணாக்கர்களின் தலைவிதியை மாற்றிக் காட்டிய மாட்சிமைப் பொருந்திய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிந்து வணங்குகிறேன்.*

கடலூர் மாவட்டத்தில் உள்ள சேத்தியாத்தோப்பு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வளாகத்தில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தும் வகையில் காகித ஆலை அமைக்கின்ற சாத்தியக்கூறு தற்போது இல்லை என்ற நிலையை மாற்றி, எதிர்வரும் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலையில் வருடத்திற்கு 75 ஆயிரம் டன் கரும்புச் சக்கை மட்டும்தான் கிடைக்கின்றது. ஆனால், புதிய காகித ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால், 6 இலட்சம் டன் கரும்புச் சக்கை தேவைப்படுகின்றது. தினந்தோறும் 50 ஆயிரம் கன மீட்டர் தண்ணீர் தேவைப்படுகின்றது. கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகின்றது. மாநில அரசினுடைய நிதிநிலைக்கேற்ப*

முடிவெடுக்கப்படும் என்று பல்வேறு கேள்விகளுக்கு நான் பதில் சொல்லியுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்கள் திருச்சியிலே ஒரு புதிய காகிதத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டி, வருகின்ற 2015, டிசம்பர் மாதம் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்ற காரணத்தினால், அரசின் சார்பாகப் புதிய காகித ஆலையைத் திறப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 291, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

291—

புதிய பேருந்து

***35233—திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு வட்டம், இராயண்டாபுரம் ஊராட்சி, தாதன்முடியனூர், பெருங்களத்தூர், மணலூர் ஆகிய பகுதிகளுக்குப் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம், திருவண்ணாமலை மண்டலம் சார்பில், தடம் எண் 233-ல் செங்கம்-கள்ளக்குறிச்சி (வழி) தண்டராம்பட்டு, இராயண்டாபுரம், தாதன்முடியனூர், பெருங்களத்தூர் மற்றும் மணலூர் வழித்தடத்தில் தினசரி 6 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார் அவர்கள்.*